Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 3, October 2023 E-ISSN: 2583-0481

# Agricultural Elements in *Paththupaattu*

**Dr. M. Selvakumar,** Assistant Professor, Department of Tamil, Thiagarajar College, Madurai, Tamilnadu, India.
ORCiD: https://orcid.org/0009-0009-2523-6419
**DOI: 10.5281/zenodo.8397662**

## Abstract

*Agriculture was the lifeblood of the Tamil people and is found in Sangam literature. The kings and poets of that day knew that the world's main occupation was agriculture. So, the poets sang it. The kings supported the idea. Sugarcane and paddy are cultivated more and food are prepared by their by-products. It is special that there are a lot of resources about agricultural elements found in Sangam Literature. Many of them speak about rice. There is no place for poverty, there is no poverty for knowledge, and there is no poverty for gifts as there is plenty of water and land in the ancient Tamil country. "Paththupaattu" is one such source from Sangam Literature that contains agricultural methods and food preparation. Hence, there is news about agriculture in "Paththupaattu". So, the purpose of this article is to examine "Paththupaattu" with ample reference to agriculture.*

**Keywords:** *Paththupaattu*, Elements, Agriculture, Importance, Tamil people.

## References

[1] *Paththupaattu Moolamum Uraiyum*, NCBH, Chennai – 600 098, 1981.
[2] *Pathinenkezhkanakku Moolam*, NCBH, Chennai – 600 098, 1981.
[3] Pulavar Ilangumaran, R. (U.A.), *Purananuru Moolamum Uraiyum*. Kovilur Madalayam, Kovilur, Karaikudi, 2003.
[4] Chanthiran, S. *"Tamil Culture in Thinaimaalai Nootraimbathu." International Journal of Tamil Language and Literary Studies*, Vol.1, May 2019.
[5] Dr. Singaravadivelan, Ar. (U.A.), *Ainkurunooru Moolamum Uraiyum*. Kovilur Madalayam, Kovilur, Karaikudi, 2003.
[6] Tamilannal. *Tholkaappiyam Moolamum Karruththuraiyum.* Meenakshi Puththaga Nilaiyam, 2008.
[7] Pasupathi, Ma.Ve. *Semmozhi Tamizh*. Thanjai Tamil University Publications, Thanjai – 613 010, 2010.
[8] Pasupathi, Ma. Ve. *Thirukkural*. Semmozhi Tamizh, Thanjai Tamil University Publications, 2010.
[9] Pasupathi, Ma. Ve. *Puraporul Venba Malai*. Semmozhi Tamizh, Thanjai Tamil University Publications, 2010.
[10] Manimegalai, M. "Puranaanooru Kaattum Velaan Panigalum Thozhil Nutpangalum." *Tamizhaaivu Sangamam, Pannaattu Aaivithazh*, Part VII, September 2020.
[11] Manickam, A. *Paththupaattu Moolamum Uraiyum*. Varthamanan Publications, Chennai – 600 014, 2009.
[12] Mohan, R. *Paththupaattu Moolamum Uraiyum*. NCBH, Chennai – 600 098, 2009.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# பத்துப்பாட்டில் வேளாண்மைக் கூறுகள்

**முனைவர் மு. செல்வக்குமார்,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0009-2523-6419
DOI: 10.5281/zenodo.8397662

**ஆய்வுச் சுருக்கம்**

*வேளாண்மையே உயிர் நாடியாக விளங்கிய செய்தி சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. உலகத் தொழில் என்பது உழவுத் தொழில் என்பதனை அன்றைய அரசர்களும், புலவர்களும் அறிந்திருந்தனர். ஆகையால் புலவர்கள் அதை பாடினர். அரசர்கள் அக்கருத்தை ஆதரித்தனர். கரும்பும், நெல்லும் அதிகமாகவே பயிரிடப்பட்டு இருப்பது புலனாகிறது. மேலும், நெல்லினைக் குறித்தச் செய்திகள் வருணனையாகவே இருப்பது சிறப்புக்குரியது. நீர் வளமும், நிலவளமும் மிகுந்து காணப்படுவதால் அங்கு வறுமைக்கு இடமில்லை, புலமைக்கு வறுமையில்லை, கொடைக்கு வறுமையில்லை என்ற செய்திகளும் இடம் பெற்றிருக்கின்றன. அவ்வகையில் பத்துப்பாட்டில் வேளாண்மைப் பற்றிய செய்திகள் மிகுந்து காணப்படுகின்றன. அவற்றுள் பத்துப்பாட்டில் வேளாண் செய்திகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.*

**திறவுச்சொற்கள்:** பத்துப்பாட்டு, கூறுகள், விவசாயம், முக்கியத்துவம், தமிழ் மக்கள்.

**முன்னுரை**

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த இனமான நம் தமிழரினத்தின் வாழ்வு தொன்று தொட்டு இயற்கையோடு இயைந்த வாழ்வாக இருந்துதிருக்கிறது. தமிழர் தம் வாழ்வும், வளமும் தாவரங்களின் வாழ்வோடும், வளத்தோடும் பின்னிப்பிணைந்து இருக்கிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று தாம் வாழும் நிலங்களை ஐந்து வகையாகப் பிரித்தறிந்து அவற்றுக்குத் தொழில்களையும், வேளாண் பொருளையும் பிரித்தமை வியப்புக்குரியது. சங்க இலக்கியமான பத்துப்பாட்டில் நிரம்பியுள்ள வேளாண் செய்திகளை ஆராய்தலின் வழி பண்டைத் தமிழரின் வியத்தகு வேளாண்செய்திகள் புலனாகின்றன. சங்க இலக்கியத்தில் காணப்படும் வேளாண் செய்திகளைத் தனித்தனியே ஆராய்ந்தால் விரிந்த பரப்பினதாய் அமையும். அவற்றுள் பத்துப்பாட்டில் வேளாண் செய்திகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**உழவுத் தொழில்**

உலகத் தொழில் அனைத்திற்கும் உழவுத் தொழில் முதன்மையானது என்பதனை அன்றைய புலவர்களும், அரசர்களும் அறிந்திருந்தனர். ஆகையால் சமூகத்தில் உயர்ந்த

இடத்தில் வைத்து உழவர்கள் போற்றப்பட்டனர். அன்றைக்கு நீர் வளமும், நில வளமும் செழித்திருந்தன. ஆகவே உழவுத் தொழில் இனிதே நடைபெற்றது. இதனை,

**குடிநிறை வல்சிச் செஞ்சால் உழவர்**

**நடைநவில் பெரும்பகடு புதவில் பூட்டி (பெரும்பாணாற்றுப்படை, பா. அ., 197 - 198)**

மேற்கண்ட வரிகளைக் கூர்ந்து நோக்கும் போது இரண்டு கருத்தினை நாம் சிந்திக்க வேண்டும். அவற்றுள் ஒன்று "குடிநிறை வல்சி உழவர்" என்பதாகும். உழவர் குடியில் உணவு நிறைந்திருக்கும் என்பதற்குச் சான்று, மற்றொன்று "செஞ்சால் உழவர்" என்பது பலமுறை உழுதலை செஞ்சால் உழவு என்பர். ஒருமுறை உழுதல் ஒருசால் உழவு என்பர். இருமுறை உழுதலை இருசால் உழவு, பலமுறை உழுதலை செஞ்சால் உழவு எனப்பட்டது. ஏனெனில், எப்பொழுதும் உழுதல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் என்பதனைக் காட்டுகிறது. உழவோடு உபசரிப்பில் சளைத்தவர்கள் அல்லர் என்பதனை, **உரன்கெழு நோன்ப கட்டுஉழவர் தங்கை (சிறுபாணாற்றுப்படை, பா.அ., 190)** வலிய எருதுகள் உடைய உழவரின் தங்கையானவர் உங்களை உபசரிப்பர் என்று சிறபாணாற்றுப்படை நூல் உழவர்கள் பற்றியும், அவர்களின் மேன்மையும் கூறியுள்ளமை புலனாகிறது. "இருண்டக் காலத்தில் வாழ்ந்த தமிழக மக்கள் காளை மாடுகட்டி உழவுத் தொழிலை மேற்கொண்டு வந்துள்ளனர் என்பதை 'லெருதோடு மலகின்றா' (139; 2) என்ற பாடலடி உணர்த்தியுள்ளதை செ. சந்திரன் எடுத்துரைக்கிறார்." (செ. சந்திரன், ப. 5).

**பத்துப்பாட்டும் வேளாண்மையும்**

'வேளாண்மை'என்பது பயிர்வளம் கால்நடைவளம், வேளாண் பொறியியல், வனவளம், மனைவளம், சமுதாயவளம் முதலிய பல்வேறு வளங்களை உள்ளடக்கியது. அப்படிப்பட்ட இப்பெருந்துறையில் அவ்வப்போது வெளிவரும் புதிய கண்டுபிடிப்புகளையும், கண்டுபிடிப்புகளைப் பயிரிடுவதற்கான செயல் விளக்கங்களுக்கும் இலக்கியங்கள் துணை புரிகின்றன. மேலும், ஒரு சமுதாயம் என்பது தன்னுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது ஆகும். அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகும். அடிப்படைத் தேவைகளுள் முதலாவதாக உணவே முன்னிறுத்தப்படுகிறது. அதனால்,

**சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால்**

**உழந்தும் உழவே தலை (குறள் 1031)**

என்கிறார் வள்ளுவர். இவ்வகைத் தலைமைச் சிறப்பு வாய்ந்த வேளாண்மைத் தொழிலின் இன்றியமையாமையைப் பழந்தமிழர் தாமும் உணர்ந்தனர். உலகிற்கும் உணர்த்தினர். உணர்ந்ததன் பயனாய் அத்தொழில் பல்தொழில் நுட்பங்களைக் கையாண்டு வேளாண் உற்பத்திக்கு வழி வகுத்தனர். இயற்கை மூல தனங்களைக் காத்தலோடு வேளாண் தொழிலில் பலவகை நுட்பங்களையும் கையாண்டு உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி வகுத்தனர். **வேளாண் வாயில் வேட்பக் கூறி (பொருணராற்றுப்படை, பா. அ., 75)** என வரும் அடியில் இடம்பெறும் வேளாண் என்பதற்கு விருந்தோம்பல் எனும் பொருள் வந்துள்ளது. **வேளாண்மை செய்து**

**விருந்து ஓம்பி வெஞ்சமத்து (பழமொழிநானூறு, பா. எ., 173-1)** என்கிறது. ஈண்டு வேளாண்மை என்பது உதவுதல் எனும் பொருளில் வந்துள்ளது. **வேளாண்மை கொல்லார் (சிறுபஞ்சமூலம், பா. எ., 46)** என்று *சிறுபஞ்சமூலம்* கூறுவதால் நற்குணத்தார் பலருக்கும் பயன்படும் பயிர்த்தொழிலைக் கெடுக்கமாட்டார் எனக் கூறுகிறது. இது காறும் செம்மொழி இலக்கியங்கள் சுட்டும் வேளாண், வேளாண்மை எனும் சொற்கள் உணர்த்துவது கொடை, உதவி, பயிர்த்தொழில் ஆகிய மூன்று பொருளைத் தருவதால் வேளாண்மை என்பது ஒரு சொல் பல் பொருள் தன்மையுடையது. அத்துடன் உலகத்து உயிர்கள் வாழ்வதற்கு உழவுத் தொழிலை மேற்கொண்டு உணவை உற்பத்தி செய்து கொடையாகக் கொடுத்து உதவுதல் எனும் நிலையில் உழவுத் தொழிலுக்கு வேளாண்மை என்னும் பெயர்வந்துள்ளது எனலாம்.

**வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது**
**இல்லென மொழிப. (தொல்காப்பியம், மரபியல், நூ. எ., 1580)**

வேளாண்மை செய்வோர் தனக்காகவும், பிறருக்காகவும் உழுது விளைவிப்பர் என்று கூறுகிறது. வேளாண்மை என்ற சொல்லுக்கு உதவி, கொடை, ஈகை, மெய் என்ற பொருள்களும் உள்ளன என்பது அறியலாகிறது. அவ்வகையில் சங்க இலக்கியப் பரம்பரையைச் சான்றோர்கள் இருவகையாகப் பிரிப்பர். அவற்றுள் ஒன்று பதினெண்மேற்கணக்கு நூல்கள் அவை பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் ஆகும்.

**முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி- மருவினிய**
**கோல நெடுநல் வாடைகோல் குறிஞ்சிபட்டினப்**
**பாலை கடாத் தொடும் பத்து. (பழம்பெரு வெண்பா)**

என்ற பழம்பெரு வெண்பாவின் வாயிலாக அறியலாம். பத்துப்பாட்டில் அதிகப்படியான வேளாண் செய்திகள் விரவிக் காணப்படுகின்றன. வேளாண் தொழிலுக்கு இருப்பதனையும் காணமுடிகிறது.

**காவிரி புரக்கும் நாடு**

**அறைக் கரும்பின் அரி நெல்லின்**
**இனக் களமர் இசை பெருக (பொருநராற்றுப்படை, பா. அ., 193 - 194)**

அறுக்கப்படும் கரும்பு வயலிடத்தும், அரியும்நெற் கழனியிடத்தும் தொழில் செய்கின்ற திரண்ட உழவரின் பண்ணோசை மிகுதலால் பறவைகள் அந்த இடத்தை விட்டு அகலும்,

**கோள் தெங்கின் குலை வாழை**
**கொழுங் காந்தள் மலர் நாகத்து**
**துடிக் குடிஞை, குடிப் பாக்கத்து (பொருநராற்றுப்படை, பா. அ., 207 - 210)**

என்ற வரிகளின் வாயிலாக, குலையை உடைய தென்னையையும், குலையாய் உடைய வாழையையும் கொழுமையான காந்தளையும், மலர்ந்த சுரபுன்னையையும் உடைய இடத்தில் மயில் ஆடும் என்கிறது.

**புனல் ஆடுமகளிர் கதுமெனக் குடையக்**

**கூனிக் குயத்தின் வாய்நெல் அரிந்து**

**சூடு கோடாகப் பிறக்கி நாள்தொறும்**

**குன்ற எனக்குவை இய குன்றாக் குப்பை**

**கடுந் தெற்று மூடையின் இடம் கெடக் கிடக்கும்**

**சாலி நெல்லின் சிறை கொள் வேலி**

**ஆயிரம் விளை யுட்டுஆக**

**காவிரி புரக்கும் நாடு கிழவோனே (பொருநராற்றுப்படை, பா. அ., 240 - 248)**

என்ற பாடலானது, நுரையை உடையதும், ஆரவாரம் உடையதும் ஆன நீர் குளத்திலும், கோட்டத்திலும்பு குந்தோறும் நீராடும் மகளிர் குடைந்து விளையாட, உழவர் மிகவும் வளைந்து நின்று அரிவாள் வாயால் நெற்கதிர்களை அறுத்து மலையாய் அடுக்கி மேருமலை என்னுமாறு குவித்த நெற் பொலி நன் குதைத்த மூடைகளில் குதிர் முதலியவற்றில் இடம் இல்லாமையால் எங்கும் கிடக்கின்ற செந்நெல் விளைகின்ற வரம்பு கட்டப்பட்ட ஒரு வேலி நிலம் ஆயிரம் கலநெல்விளையும் படி காவிரியாற்றினால் வளப்படுத்தும் படிநாடு முழுவதும் தனக்கே உரிய தாம் இயல்பை உடையவன் ஆவான் என்கிறது.

**மருத நில விளை பொருள்**

**செம்பொன் மலையின் சிறப்பத் தோன்றும்**

**தண் பணை தழீஇ யதளரா இருக்கை (பொருநராற்றுப்படை, பா. அ., 241 - 242)**

பாம்புகள் மருத நிலத்துப் பொந்துகளில் தங்கும் அம்மரத்தின் நிழலில் நெற்களங்கள் இருந்தன. களத்தில் உள்ள நெல்லை எலி திண்ணாமல் இருக்கக் காவலாய் இருந்தன. ஏர்க் களம்பாடும் பொருநர் வருதலும், பாடுதலும் அவர்க்கு உழவர், வழங்குதலும் வழக்கம் இதனை கள வழி வாழ்த்து என்பர். கடாவடித்து எடுக்கப்பட்டுக் குவிக்கப்பட்ட போர் வடக்கில் உள்ள பொன்மலை போல் விளங்கியது எனக் கூறப்பட்டது. மேலும்,

**விசயம் அடூஉம் புகைசூழ் ஆலைதொறும்**

**கரும்பின் தீம்சாறு விரும்பினிர் மிசைமின் (பொருநராற்றுப்படை, பா. அ., 261 - 262)**

மேகம் தவழும் மூங்கில் வளர்ந்த மலை அம்மலையில் பக்கத்தில் யாளியால் தாக்கப்பட்ட பலவும் ஒன்று கூடிக் கலங்கிப் பிளிறியதைப் போன்று ஆலையின் ஆரவாரம் அமைந்திருக்கும். கரும்புச் சாற்றைக் கட்டியாய்க் காய்ச்சும் ஆலையில் நீங்கள் செல்லின் கரும்புச்சாற்றை அருந்தலாம் என்கிறது.

**கார்க் கரும்பின் கமழா லைத்**

**தீத் தெறுவின் கவின் வாடி**

**நீர்ச் செறுவின் நீணெய்தல்**

**பூச்சாம்பும் புலம்.... (பட்டினப்பாலை, பா. அ., 9 - 12)**

என்ற வரிகளும் மேற்கண்ட செய்தியினை உணர்த்துவதை அறியலாம்.

**முல்லைப் பாட்டில் கரும்பும், நெல்லும்**

**ஓங்கு நிலைக் கரும்பொடு கதிர் மிடைந்து யாத்த**

**வயல் விளை இன்குளகு உண்ணாது நுதல் துடைத்து (முல்லைப்பா., பா. அ., 32 - 33)**

கரும்புகளுடன் வயிலில் விளைந்த நெற்கதிர்களைப் பொதியக் கட்டிய சாலியையும் இனிய அதிமதுரத் தழையினையும் உண்ணாமல் இருக்கும் யானையின் செயலினைக் கூறும் போது முல்லைப்பாட்டில் கரும்பும், நெல்லும் விளைவதை அறியலாம்.

**காஞ்சியில் வேளாண்மை**

**மழை தொழில் உதவமா திரம் கொழுக்க.... (மதுரைக்காஞ்சி, பா. அ., 10)** வேண்டும் காலத்தில் மழை பெய்து உலகில் உழவு முதலிய நிகழ உதவ உலகமும் அதற்கு உறுதி பயக்கும் அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை நிகழச் செய்ய மழை காரணம் என்பது வெளிப்படை ஆதலால் 'தொழில் உதவ' என்று பொதுவில் கூறியுள்ளதைக் காணலாம். **வெள்ளம் மாறாது விளையுள் பெருக / நெல்லின் ஓதை அரிநர் கம்பலை (மதுரைக்காஞ்சி, பா. அ., 109 - 110)** நெற்கதிர் முதிர்ந்து காற்றினால் ஒன்றுடன் ஒன்று உராய்தலால் உண்டாகும் ஓசை, நெல்லை அறுப்பவரால் உண்டாக்கப்படும் ஓசை, விளைந்தவற்றை தின்ன வரும் பறவைகளின் ஓசை இங்கு கூறப்பட்டுள்ளன. **இரு வகையான் இசை சான்ற / சிறு குடிப்பெருந் தொழுவர் / குடி கெழீஇய நல்நில வரோடு (மதுரைக்காஞ்சி, பா. அ. 121 - 123)** சான்றோரால் புகழ்ந்து பேசப்படுகின்ற அகன்ற சீரிய செல்வமாகிய உழவு வாணிகம் என்னும் இருவகையானும் புகழ் நிறைந்த சிறிய குடிமக்களும் பெரு வணிகமே ஆகிய குடிமக்கள் மிக்க நான்கு நிலங்களில் வாழ்வர் என்று கூறுகிறது.

**முல்லை நிலத்து வேளாண்மை**

**சிறு தினை கொய்ய கவ்வை கறுப்ப / கருங் கால் வரகின் இருங் குறல் புலர... (மதுரைக்காஞ்சி, பா. அ., 271 - 272)** சிறிய தினைக்கதிர்கள் கொய்யப்படுகின்றன. எள் இளங்காய் முற்றிக் கரிய நிறம் கொள்கின்றன. கரிய தாளையுடைய வரகில் கரிய கதிர்கள் முற்றி ஈரம் கொள்கின்றன. குழிகளில் மணிகள் மிளிர்கின்றன. அதனை, முல்லை நில மக்கள் கொய்தனர் என்பதனை விளக்கிக் கூறுகின்றன.

**குறிஞ்சி வளம்**

**...ஐவன வெண்ணெ லொடுஅரில் கொள்பு நீடி**

**இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும்**

**பல்வேறு தாரமொடு கல்லகத்து ஈண்டி (மதுரைக்காஞ்சி, பா. அ., 287 - 290)**

நறுமணம் உடைய அகில், சந்தனம் முதலிய மரங்களை அழித்துத் திருத்திய மேட்டு நிலத்தில் விதைத்த சிறிய கதிர்களைக் கொண்ட தோரைநெல், வெண்சிறுகடுகு, ஐவன நெல்லுடன் பிணங்கி வளரப்பட்டு இஞ்சியும், மஞ்சளும் பசிய மிளகுக் கொடியும் பிறவும் பலவாய் வேறுபட்ட பொருள்களும் கல் தரையில் குவிக்கப்பட்டுள்ளன என்று கூறுவதிலிருந்து குறிஞ்சி நிலத்தில் விளையும் பொருட்களை அறிய முடிகிறது.

**நெடுநல்வாடையில் நீர் வளமும், நிலவளமும்**

**வண்தோட்டு நெல்லின் வருகதிர் வணங்க / முழுமுதற் கமுகின் மணிஉறழ் எருத்தின் (நெடுநல்வாடை, பா. அ., 22 - 23)** அகன்ற வயல்களில் நிறைந்த நீரால் மிக்கெழுந்த வளமான இலையையுடைய நெல்லினின்றும் புறப்பட்ட கதிர்கள் முற்றி விளையும் என்பதில் இருந்து நீர் வளமும், நிலவளமும் புலனாகிறது. குறிஞ்சிப் பாட்டில் செங்காந்தள் மலர் முதல் புழகு ஈறாகச் சொல்லப்பட்ட மலர்களும் குறிஞ்சி நிலத்தில் பூக்கின்றன என்பதனை அறியலாம். பட்டினப் பாலையில் கரும்பும், நெல்லும் கழனிகளிலும் குவளையும், நெய்தலும் பொய்கைகளில் இருப்பதைக் காணமுடிகிறது.

***மலைபடுகடாம்* காட்டும் வேளாண்மை**

**மகுளி பாயாது மலிதுளி தழாலின் (மலைபடுகடாம், பா. அ., 103)**

**விளை தயிர்ப் பதிர்வின் வீஉக்கு இருவி தொறும் (மலைபடுகடாம், பா. அ., 109)**

**வாலிதின் விளைந்தன ஐவன வெண்ணெல் (மலைபடுகடாம், பா. அ., 115)**

**இருகு குலைமுருகப் பழுத்த பயம்புக்கு (மலைபடுகடாம், பா. அ., 132)**

எள், ஐவன வெண்ணெல், மூங்கில் நெல், வெண்சிறு கடுகு, இஞ்சிக்கிழங்கு, வாழைகள், பெருமூங்கில் நெல், நாவல் மரங்கள், கூவைக்கிழங்கு, தேமா, ஆசி பலா மரங்கள் மலைபடு கடாமில் இயற்கை வளங்களையும் வேளாண்முறைகளிலும் சிறப்பாக படம்பிடித்துக் காட்டுகின்றன. வேளாண்மைத் தொழிலுக்கு நிலவளமும், நீர்வளமும் அவசியத் தேவைகளாகும். நிலத்தை மண்ணை ஆள்பவரே வேளாளர் என அழைக்கப்பட்டனர். இவர்கள் மண்ணின் தன்மை அறிந்து அதற்கேற்பப் பயிர்செய்து விளைச்சலைப் பெறும் அறிவுடையோராக விளங்கினர்.

**மருதநிலம்**

மருதநிலம் என்பது வயலும் வயல் சார்ந்த பகுதியாகும். இந்நிலத்தில் செய்யப்படும் தலையாய தொழில் உழவு ஆகும். மருத நிலத்தின் முக்கிய விலங்கு எருது ஆகும். மருத நிலத்தில் வாழ்பவர்கள் உழவர். உழவர் உழவுத்தொழிலுக்கும் எருதுகளையே பயன்படுத்தி இருக்கின்றனர். மருத நிலத்தில் நெல், கரும்பு, வாழை முதலிய பயிர்களைச் சாகுபடி செய்திருக்கின்றனர். சாகுபடி செய்வதற்கு ஏற்ற நிலத்தைப் பயன்படுத்தவே, உழவு மாடுகளைப் பயன்படுத்தியிருக்கின்றனர். நிலத்தை உழவு செய்வதிலிருந்து விதைத்தல், நீர்ப் பாய்ச்சுதல், அறுவடை செய்தல் வரையிலான அனைத்து வேலைகளும் எருதுகளை நம்பியே அமைகிறது.

**உழவு எருதுகள்**

சங்க இலக்கியத்தில் உழவு மாடுகள் பற்றிய குறிப்புகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. உழவு மாடுகளின் வாழ்விடம் மருத நிலமாகும். உழவுத் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் எருதுகளின் உழவு எருதுகள், பால்தரும் எருதுகள் என பல வகைகள்உள்ளன. சங்க இலக்கியத்தில் எருதுகளின் தோற்றம், செயல்கள், வலிமை, உழவுத்

தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் விதம் என எருதுகளின் மொத்த வாழ்வியலும் கூறப்பட்டிருக்கிறது. **மள்ளர் அன்ன தடங்கோட்டு எருமை (ஐங்குறுநூறு, எருமைப்பத்து, பா. எ., 94 – 1)** என்ற வரியானது எருமையின் தேவையினை உணர்த்துகிறது. மேலும் எருதின் தனித்தன்மை குறித்து "உழவுக்கு நன்கு பழக்கப்படுத்தப்பட்ட எருதுகளே" பயன்படுத்தப்படுகின்றன என்று *புறநானூறு* வழி ம.மணிமேகலை எடுத்துரைத்துள்ளார். **பல்லெருத் துள்ளும் நல்லெருது நோக்கி (289: 2) (ம. மணிமேகலை, ப. 3)**

**நெல்அரிந்து கடாவிடுதல்**

உழவர்கள் தம் சீரிய முயற்சியால் உழுது விதைத்து பயிரிட்ட நெல் விளைந்து முற்றிய நிலையில் அறுவடை செய்கின்றனர். இவ்வாறு அறுவடை செய்கின்ற காட்சியைப் *பெரும்பாணாற்றுப்படை*, **கடுப்புடைப் பறவைச் சாதி அன்ன / பைது அறவிளைந்த பெருஞ் செந்நெல்லின் (பெரும்பா., பா. அ., 229 – 230 )** எனும் வரிகளில் நெல் அரிந்து கடாவிடும் நிகழ்ச்சியைப் பதிவிடுகிறார். நன்கு விளைந்த முற்றிய செந்நெல் குளவித் திரளைஒத்துள்ளது. நெல் திரண்ட தாளை உழவர்கள் அறுத்து மருதமர நிழலிடத்தே உள்ள பெரிய களத்தில் குவித்து வைக்கின்றனர். இவ்வாறு குவித்து வைத்த நெற்போரைப் பிரித்து அடித்து கடாவிடுகின்றனர். கடாக்கள் மிதித்து உதிர்ந்த நெல் மணிகள் கூலங்களோடு கலந்துள்ளன. இந்நெல் மணிகளைத் துகள்கள் அறும்படி வைக்கோல் தூசு முதலியவற்றைத் தனித்தனியே பிரித்து, உலர்த்திப் பின்னர் கோடைக் காற்றிலே தூற்றி நெல்லைப் போராகக் குவிக்கின்றனர். குவித்த நெற்பொலிகள் வடதிசையின் கண் உள்ள மேருமலையைப் போன்று காட்சியளிக்கின்றன. இத்தகைய வற்றாத வளம் நிறைந்த பகுதியாக உழவர்களின் குடியிருப்புகள் உள்ளன. "பலிபெறு வியன்களம்" நெற்பொலிகள் இருக்கும் களத்தின் கண் சென்று உழவர் களைப்பாடும் இரவலர்க்கு நெல்லை வழங்குதல் உழவர்களின் வழக்கம். இதனையே "பலிபெறுதல்" என்கிறார் ஆசிரியார். இவ்வழக்கத்தினைப் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் "களவழி வாழ்த்து" எனும் துறையாகக் குறிப்பிடுவார். **தண்பனை வயலுழ வனைத் / தெண்கிணை வன்திருந்து புகழ்கிள ந்தன்று (புறப்பொ. வெண்., வாகைப், பா.186)** ஆக, களவழிபாடும் இரவலருக்கு நெல் வழங்குதல் உழவர்களின் வழக்கம் என்பதனை மேற்கண்டவரிகள் உணர்த்துகின்றன. அதனால் தான் விவசாயிகளைக் கடவுளுக்கு நிகராய் வைத்துப் போற்றியுள்ளனர். உண்டி கொடுப்பவரே உயிரைக் கொடுப்பவராகிறார் என்பது மறுத்தற்கு இல்லை.

**தாளாற்றித் தந்தபொரு ளெல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.(குறள். 212)**

என்ற குறளில் ஈட்டிய பொருள் அனைத்தும் தகுதியுடைய சான்றோர்க்கு விருந்து தருவதேயாகும் என்பதனை உணர்ந்து வாழ்ந்தவர்கள் நம்முடைய முன்னோர்கள்.

**உழைப்பே மூலதனம்**

மனித வாழ்வின் அடிப்படைத் தேவையான உணவின் உற்பத்தித் தொழிற்சாலையாக

மட்டும் நிலம் இருப்பதில்லை. அந்த உற்பத்தி மூலமாகத்தான் ஒரு மனித சமூகத்தின் வாழ்வு முறைகள் கட்டமைக்கப்படுகின்றன. நிலம் என்பது நிலையானப் பருப்பொருள். இதில் தற்செயலான மாற்றங்கள் என்பது மனிதன் அதன் மீது செலுத்தும் உழைப்பு என்பதாகும். உழைப்பைச் செலுத்துவதன் மூலமாகத் தன் தேவைகளை மனிதன் அடைகிறான். இது நிலத்தின் பெருமையாகும். மனித சமூகம் பல்வேறு விதமாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதில் தீவிர ஈடுபாடு கொண்டுள்ளது. இந்த ஈடுபாடு இன்று நேற்று அல்ல பன்னெடுங்காலத் தொடர் வரலாறாக இருந்து வருகிறது. இதனடிப்படையில் சங்ககால மனிதன் நிலத்தின் மீது மூலதனமாகச் செலுத்திய உழைப்பின் அடிப்படையில் அவனது வாழ்வியல் அடையாளங்கள் வெளிக்காட்டப்படுகிறது. நிலத்தின் மீது உழைப்பைச் செலுத்துவதன் மூலமாக உணவைப் பெறமுடியும் என்பதனைத் தெளிவாகத் தெரிந்து வைத்து இருந்தார்கள். முதல் முறையாக ஒரு தொழிலில் கையாளப்படும் நுட்பங்கள், உத்தி முறைகள் போன்றவை தொடர் வெற்றியைத் தருகின்ற போது அது பண்பாடு என்னும் அந்தஸ்தினைப் பெறுகிறது. மேலும், உழைப்பை மட்டும் செலுத்துவதனால் முழுமையான உற்பத்தியைப் பெற்று விட முடியாது. அதனைப் பாதுகாப்பதற்கு அறிவினையும் பயன்படுத்த வேண்டும். அதனையும் சங்ககால மக்கள் பெற்றிருந்தனர் என்பதனை அறியலாம். பழந்தமிழரது இருப்பிடங்களைச் செய்தொழிலுக்கு ஏற்பவும் வேறுபட்டமைந்தன. உணவுத் தேக்கம் என்ற நிலையின் வளர்ச்சியாக உணவைச் சேமிக்கும் எண்ணம் தோன்றியது. பருவ கால நிலைக் கண்டு உணவைத் தேடும் தொழில் நுட்பம் பரவியது.

**நீரின்றி அமையாது வேளாண்மை**

மிகுதியான அளவில் நீரைத் தேக்கி வைக்க ஏதுவாகச் சங்க இலக்கியங்களில் அணைகள் இருந்த செய்தியினைப் பகர்கிறது. **நீர்மிகின் சிறையும் இல்லை (புறநானூறு, பா.எ. 51-1)** என்ற புறநானூற்றுப் பாடல் நீர்ப்பெருக்கம் அதிகரித்தால் அதனைக் கட்டுப்படுத்தக் கூடிய வலிய அரண் இல்லை என்று கூறுகின்றது. சங்ககால மக்கள் நீரைப் பெருக்கி வைத்து வேளாண் செய்த செய்தியும் இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டு இருப்பதைக் காணலாம்.

**முடிவுரை**

உழவர்கள் உழவுத்தொழிலைத் திறம்படச் செய்துள்ளனர். ஆழ உழுதுகளை களைந்து, பயிர்ப் பாதுகாப்போடு பயிர் வளர்த்த பாங்கைப் பார்க்க முடிகிறது. உழவர்களில் குடியிருப்புகளில் எப்போதும் உணவுப்பொருட்கள் காணப்படுகின்றன. அதை பிறருக்குக் கொடுத்தும் மகிழ்ந்துள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது. இதனடிப்படையில் சங்ககால மனிதன் நிலத்தின் மீது மூலதனமாகச் செலுத்திய உழைப்பின் அடிப்படையில் அவனது வாழ்வியல் அடையாளங்கள் வெளிக்காட்டப்படுகிறது. நிலத்தின் மீது உழைப்பைச் செலுத்தினால் உணவைப் பெற முடியும் என்பதைத் தெளிவாக சங்க இலக்கியம் எடுத்து இயம்புகிறது.

**துணைநூற்பட்டியல்**

[1] *பத்துப்பாட்டுமூலம்.* NCBH, அம்பத்தூர், சென்னை, 1981.

[2] *பதினெண் கீழ்க்கணக்கு மூலமும உரையும்.* NCBH, சென்னை, 1981.

[3] புலவர் இளங்குமரன், இரா. (உ.ஆ), *புறநானூறு மூலமும் உரையும்.* கோவிலூர் மடாலயம், கோவிலூர், காரைக்குடி, 2003.

[4] சந்திரன். செ, "*திணைமாலை நூற்றைம்பதில் தமிழர் பண்பாடு.*" *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, Vol.1, 2019.

[5] முனைவர் சிங்காரவடிவேலன், அர. (உ.ஆ), *ஐங்குறுநூறு மூலமும் உரையும்.* கோவிலூர் மடாலயம், கோவிலூர், காரைக்குடி, 2003.

[6] தமிழண்ணல், *தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும்.* மீனாட்சி புத்தக நிலையம், 2008.

[7] பசுபதி, ம.வே. *செம்மொழித் தமிழ்.* தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியீடு, தஞ்சாவூர், 2010.

[8] பசுபதி, ம.வே. *திருக்குறள்.* தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியீடு, தஞ்சாவூர், 2010.

[9] பசுபதி, ம.வே. *புறப்பொருள் வெண்பாமாலை.* செம்மொழித் தமிழ், தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியீடு, தஞ்சாவூர், 2010.

[10] மணிமேகலை, ம. "புறநானூறு காட்டும் வேளாண் பணிகளும் தொழில்நுட்பங்களும்." *தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டுஆய்விதழ்*, பகுதி VII, பதிப்பு 20, செப்டம்பர் 2020.

[11] மாணிக்கம், அ. *பத்துப்பாட்டு மூலமும் உரையும்.* வர்த்தமானன் பதிப்பகம், 2009.

[12] மோகன், இரா. (உ.ஆ), *பத்துப்பாட்டு மூலமும் உரையும்.* NCBH, சென்னை, 2009.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.